DRAFT

நீண்ட தலைப்பு	**பெண்களுக்குச் சம உரிமைகளைப் பெறுவதற்காகப் பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் பற்றிய தேசிய கொள்கையினைத் தொடர்ந்து பெண்கள் பற்றிய ஒரு தேசிய ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதற்கான ஒரு சட்டம்: ஒம்புட்ஸ்மனை நியமித்தல் உள்ளடங்கலாகப் பெண்களின் உரிகைளைப் பாதுகாத்தல் மற்றும் அவ்வாறான உரிமை மீறல்களுக்குச் சட்ட நடவடிக்கை எடுத்தலுக்கான பொறிமுறையினை நிறுவுதல்: மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குதல்**
முன்னுரை	மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் பாகுபாடின்மைக் கோட்பாட்டினை உறுதிப்படுத்துகிறது மற்றும் அனைத்து மனிதர்களும் சுதந்திரமாகப் பிறந்துள்ளனர் மற்றும் கௌரவம் மற்றும் உரிமைகளில் சமமானவர்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வேறுபாடுகள் உட்பட, வேறுபாடு இல்லாமல் அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உரித்துடையவர்கள் என்று பிரகடனப்படுத்துகின்றது என்பதைக் கருத்தில்கொண்டும்,
	ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினையும் இல்லாதொழிப்பது பற்றிய சமவாயத்தினை இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் மேற்கூறிய சமவாயத்தின் கீழ் அதன் கடப்பாடுகளைப் பின்பற்றுவதற்காக இலங்கை அரசாங்கம் அதன் தேசிய சட்டங்கள் அவ்வாறான சமவாயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுடன் இசைவுறுவதை உறுதிப்படுத்துவதற்கான மற்றும் தேவைப்படுகையில் புதிய சட்டங்களை இயற்றுவதற்கான பணியைப் பொறுப்பேற்றுள்ளது என்பதைக் கருத்தில்கொண்டும்,
	தேசிய நலனுக்காக, மேற்கூறிய கோட்பாடுகள், கடப்பாடுகள் மற்றும் கடமைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் மற்றும் ஏனைய தொடர்புடைய சர்வதேச சமவாயங்களின், பொருத்தணைகளின் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளின் கோட்பாடுகள் ஆகியவற்றுக்காக ஒரு சட்டச் சட்டகத்தினுள் ஏற்பாடு வழங்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் பணிக்கான ஆணையினைக் கொண்ட ஒரு பொறிமுறைக்கான ஏற்பாடு வழங்கப்படுவது அவசியமாகும் என்பதைக் கருத்தில்கொண்டும்,
	மேற்கூறிய கோட்பாடுகள், கடப்பாடுகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றுக்குச் செயலூக்கமளிப்பதற்கு அவசியமான அதிகாரங்களுடன் தேசிய மட்டத்தில் தேசிய பெண்கள் ஆணைக்குழுவினை நிறுவுவது பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு செயற்திறன்மிக்க பொறிமுறையாகச் சேவையாற்றும் என்பதைக் கருத்தில்கொண்டும்,
	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு இயற்றப்படுமாக:- :-
குறுகிய தலைப்பு	**1.** இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டின் ---- ஆம் இலக்க பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழச் சட்டம் எனக் குறிப்பிடப்படுமாக. வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையினால் அமைச்சர் நியமிக்கும் அவ்வாறான ஒரு திகதியில் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் செயலூக்கம் பெறும் (இதனகத்துப் பின்னர் இந்தச் சட்டத்தில் "நியமிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பிடப்படும்).

	பகுதி 1 **இந்தச் சட்டத்தின் குறிக்கோள்கள்**
சட்டத்தின் குறிக்கோள்	**2.** (1) இந்தச் சட்டத்தின் ஒட்டுமொத்தக் குறிக்கோள், பெண்கள் பற்றிய ஒரு தேசிய ஆணைக்குழுவினை நிறுவுவதன் மூலம் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பிடப்படும்) அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள, 2022 ஆம் ஆண்டின் --- இலக்க பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல் சட்டம் மற்றும் ஏனைய தேசிய சட்டவாக்கங்களின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளையும் பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினை இல்லாதொழிப்பது பற்றிய சமவாயத்தின் ("CEDAW"), படி பெண்கள் குறித்து அரசினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கடமைகளையும் அடைவதற்கும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை வழங்குவதாகும். இந்தச் சட்டத்தில் பொதியப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து அமுல்படுத்துவதற்கு அவசியமான சகல அதிகாரங்களும் கடமைகளும் செயற்பாடுகளும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும்.
	(2) சட்டத்தினை அமுல்படுத்தும் நோக்கத்திற்காக பின்வருவன ஆணைக்குழுவிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள தனித்துவமான குறிக்கோள்களாகும்- (a) பால்நிலை, விளிம்புநிலையாக்கம் மற்றும் வன்முறை ஆகியவற்றின் அடிப்படையிலான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டில் இருந்தும் பெண்களைத் தடுத்துப் பாதுகாத்தல் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைச் செயற்பாடுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளுக்காகவும் தண்டனை வழங்கலுக்காகவும் நடவடிக்கை எடுத்தல்; (b) நிலவுகின்ற சமூக மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் தொடர்பான முறைசார் மற்றும் முறைசாரா நியமங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையிலான பால்நிலைச் சமத்துவமின்மைக்கான காரணங்களை அகற்றல்; (c) பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து பெண்களுக்கான சமத்துவம் மற்றும் நீதியினை உறுதிப்படுத்தி இடைமாற்ற நீதியுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகள் மற்றும் பொறிமுறைகளில் பெண்களின் பங்கேற்பினை இயலுமான அளவு உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்; (d) பெண்களுக்குச் சமமான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகச் CEDAW சமவாயத்தின் கீழும் ஏனைய சர்வதேச உடன்படிக்கைகளின் கீழும் இலங்கை அதன் கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படும் நடவடிக்கைகளை எடுக்கின்றது என்பதை உறுதிப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

	பகுதி II **பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு**
பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவினை நிறுவுதல்	**3** (1) "பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு" எனும் ஆணைக்குழு நிறுவப்படும் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பிடப்படும்). ஆணைக்குழு, உபபிரிவு (1) இனால் அதற்கு ஒதுக்கப்பட்ட பெயரினால் தொடர்ச்சியான பதவியுரிமை மற்றும் பொதுவான முத்திரையுடன் கூடிய ஒரு நிறுவனமாக இருக்கும் என்பதுடன் இவ்வாறான பெயரில் நிறுவனத்தினால் வழக்குத் தொடரலாம் மற்றும் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுக்கப்படலாம்.
ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்	4. (1) பால்நிலைச் சமத்துவத்தினையும் பெண்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் மேம்படுத்துவதில் பெயர்பெற்றவர்களில் இருந்து அல்லது அவ்வாறான விடயங்களில் அறிவு அல்லது நடைமுறை அனுபவத்தினைக் கொண்டவர்களில் இருந்து தேர்வுசெய்யப்பட்டு அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் படி ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு கொண்டிருக்கும். (2) இந்தச் சட்டம் செயற்படத் தொடங்கிய திகதியில் இருந்து ஒரு மாதத்தினுள் அல்லது ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் வெற்றிடம் ஏற்பட்ட திகதியில் இருந்து ஒரு மாதத்தினுள் அரசியலமைப்புச் சபை அதன் பரிந்துரைகளை மேற்கொள்ளும்.
	(3) ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் ஐந்து உறுப்பினர்கள் பெண்களாக இருப்பர் மற்றும் இரண்டுக்கும் மேற்படாத உறுப்பினர்கள் ஆண்களாக இருப்பர்.
	(4) அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்பட்ட பெண் உறுப்பினர்களில் இருந்து ஜனாதிபதி ஒரு தலைவரை நியமிப்பார்.
	(5) தலைவர் உள்ளிட்ட குறைந்தபட்சம் மூன்று உறுப்பினர்கள் முழு நேர உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.
	(6) ஒவ்வொரு உறுப்பினரும், அவர் இறப்பினால், இராஜினாமாவினால், அல்லது அகற்றப்படுவதால் பதவியினை நேரகாலத்துடன் வறிதாக்காத பட்சத்தில் நியமனத் திகதியில் இருந்து நான்கு வருடங்களுக்குப் பதவி வகிப்பார் என்பதுடன் பதவியில் இருந்து அகற்றப்படாமல் இருக்கும் பட்சத்தில் மீள்நியமனத்திற்கும் தகைமை பெறுவார்.
ஆணைக்குழுவின் உறுப்பினர்களை அகற்றல்	**5.** (1) பின்வரும் வகையில் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவியில் இருந்து அகற்றப்படுவார் – (a) ஜனாதிபதியினால், அவ்வாறான உறுப்பினர்-

	(i) தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தினால் திவாலானவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டால்; (ii) தனது பதவியின் கடமைகளுக்கு வெளியே ஊதியம் பெறும் தொழில் ஒன்றில் ஈடுபட்டு அது சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடனான கலந்தாலோசிப்பில் பிரதம அமைச்சரின் பரிந்துரையினடிப்படையில் உருவான ஜனாதிபதியின் அபிப்பிராயத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர் என்ற ரீதியில் அவரின் கடமைகளுடன் முரண்படுகையில்; (iii) பதவியினைத் தொடர முடியாத அளவிற்கு மனம் அல்லது உடலில் தெம்பின்மை; (iv) தகைமைவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தினால் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனப் பிரகடனப்படுத்தப்படல்; (v) நெறிப்பிறள்வு சம்பந்தமாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருத்தல், அல்லது (vi) தலைவரின் முன்னனுமதியின்றி ஆணைக்குழுவின் மூன்று தொடர்ச்சியான கூட்டங்களிற்குச் சமூகமளிக்காமை, அல்லது (b) நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தை அல்லது இயலாமை ஆகியவற்றினைக் காரணம் காட்டி அவ்வாறான அகற்றலுக்காக பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் (சமூகமளிக்காதவர்கள் உள்ளிட்ட) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையினைத் தொடர்ந்து அவரால் விடுக்கப்பட்ட உத்தரவின் பேரில்: எவ்வாறாயினும், இவ்வாறான தீர்மானத்தின் அறிவிப்பில் பாராளுமன்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினருக்குக் குறையாதவர்கள் ஒப்பமிட்டாலேயன்றி மற்றும் கூறப்படும் தவறான நடத்தை அல்லது இயலாமை பற்றிய முழு விபரங்களும் வழங்கப்பட்டாலேயன்றி இவ்வாறான ஓர் உரையினைச் சமர்ப்பிப்பதற்கான எத்தீர்மானமும் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்படலாகாது அல்லது பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடப்படலாகாது.
	(2) உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்கான உரையினைச் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கான நடைமுறை ஆணைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினரை நீக்குவதற்கான உரையினைச் சமர்ப்பித்து நிறைவேற்றுவதன் சகல அம்சங்களிலும் பொருந்தும்
ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளங்கள்	**6**. ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன் அது திரட்டிய நிதியில் இருந்து அறவிடப்படும் மேலும் அது உறுப்பினரின் பதவிக் காலத்தின் போது குறைக்கப்பட மாட்டாது.
ஆணைக்குழுவின் அதிகாரங்கள்	**7.** (1). ஆணைக்குழு அதன் செயற்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான அவ்வாறான சகல அதிகாரங்களையும் கொண்டிருக்கும்

	(2) உபபிரிவு (1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பொதுவான தன்மைக்குப் பங்கம் ஏற்படாமல், ஆணைக்குழு பின்வருவனவற்றுக்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்: - (a) பகுதி iii இன் ஏற்பாடுகளுக்கு அமைவாகப் பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமையினை அல்லது மீறப்படவுள்ளமையினை விசாரித்து ஆராய்தல்; (b) நீதிமன்றத்தின் முன் நிலுவையாக இருக்கும் பெண்களின் உரிமை மீறப்பட்டமை பற்றிய அல்லது மீறப்படவுள்ளமை பற்றிய எந்தவொரு வழக்கு விசாரணையிலும் அவ்வாறான நீதிமன்றத்தின் அனுமதியுடன் தலையீடு செய்தல்; (c) பெண்களின் உரிமை மீறப்பட்டமை பற்றிய அல்லது மீறப்படவுள்ளமை பற்றிய பகிரங்க விசாரணையினை நடத்தல்; (d) அதன் சொந்தப் பிரேரணையில் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுத்தல்; (e) அந்த நீதிமன்றத்தினால் குறிப்பிடப்படும் பெண்களின் உரிமைகள் பற்றிய எந்த விடயம் தொடர்பாகவும் மேலாண்மை மிக்க நீதிமன்றத்தினால் அல்லது வேறு ஏதாவது நீதிமன்றத்தினால் பணிப்புரை விடுக்கப்பட்டவாறாக நடவடிக்கை எடுத்தல்; (f) இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள எச்செயற்பாட்டினையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக எந்த அரசாங்க அதிகாரசபையிடம் இருந்தும் அல்லது வேறு அதிகாரசபையிடம் இருந்தும் எத்தகவலையும் வேண்டுதல் அல்லது அதற்காக அழைப்பு விடுத்தல்; (g) இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள எச்செயற்பாட்டினையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காகத் தேவைப்படும் எத்தகவலையும் அறிக்கையினையும் அல்லது தரவுகளையும் வழங்குவதற்கு, ஆணைக்குழுவின் முன் நேரில் ஆஜராகுமாறு ஏதேனும் அரசாங்க அல்லது வேறு எந்த அதிகாரத்தையும் கோருதல்; (h) ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காகக் குழுக்களை நியமித்தல்; (i) ஆணைக்குழுவின் பிராந்திய அல்லது மாகாண அலுவலகங்களைத் திறத்தல்;

	(j) இச்சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட அல்லது ஏதாவது கொள்வனவு, மானியம், பரிசு மூலம் அல்லது வேறுவிதமாக ஆணைக்குழு வசம் உள்ள எவ்விதமான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை கொள்ளல், எடுத்தல், மற்றும் வைத்திருத்தல் மற்றும் அவ்வாறான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை விற்றல், அடைமானம் வைத்தல், குத்தகைக்கு விடல், கொடையாக வழங்குதல், பரிமாற்றத்திற்கு வழங்கல் அல்லது அகற்றல்; (k) ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிறைவேற்றத் தேவையானவாறாக ஆணைக்குழுவின் அதிகாரிகளையும் வேறு ஊழியர்களையும் நியமித்தல்; (l) ஆணைக்குழு அவசியம் எனக் கருதும் விதத்தில் இவ்வாறான விதத்தில் அதன் நிதிகளை முதலீடு செய்தல் (m) வங்கிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் மூடுதல்; (n) உள்நாட்டு மூலங்களில் இருந்து அல்லது வெளிநாட்டு மூலங்களில் இருந்து கொடைகளை, பரிசுகளை அல்லது நன்கொடைகளைப் பெறல்: சகல வெளிநாட்டுக் கொடைகள், பரிசுகள் அல்லது நன்கொடைகள் தொடர்பாக வெளிவளத் திணைக்களத்திடம் இருந்து ஆணைக்குழு எழுத்திலான முன் அங்கீகாரத்தினைப் பெறுதல்; (o) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்த அவ்வாறான நபர் ஒருவருக்கு நியாயமான முறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய செலவுகளைப் பூர்த்திசெய்யக்கூடியது எனக் கருதப்படக்கூடிய அவ்வாறான பணத் தொகையினைப் பாதிக்கப்பட்ட நபருக்கு அதன் திட்டவட்டமான தற்றுணிபின் பேரில் வழங்கல்; (p) பெண்களின் உரிமைகள் மற்றும் பெண்கள் தொடர்பாகச் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் தொடர்பாக விழிப்புணர்வுகளை உருவாக்கவும் தகவல்களைப் பரப்பவும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தல்;
ஆணைக்குழுவின் செயற்பாடுகள்	**8.** ஆணைக்குழுவின் செயற்பாடுகளாவன– (a) பெண்களின் உரிமைகளுக்கான மரியாதையினைப் பெறுவதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் அனைத்து வடிவிலுமான பாகுபாடு, விளிம்புநிலையாக்கம் மற்றும் வன்முறையினைத் தடுப்பதற்கும் அவற்றில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் அவ்வாறான அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்;

(b) பெண்களுக்கு எதிரான வன்முறையினைத் தடுப்பது தொடர்பான உரிய விழிப்புணர்வினை மேம்படுத்தல், அடைந்துகொள்ளல் மற்றும் உறுதிப்படுத்தல்;

(c) முறைப்பாட்டினைப் பெறுகையில் அல்லது அதன் சொந்தப் பிரேரணையினால் இணக்கம் மற்றும் மத்தியஸ்தம் மூலம் அவற்றுக்கான சட்டப் பரிகாரத்தினை அல்லது தீர்வினை இதனகத்துப் பின்னர் வழங்கப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை வழங்கல்;

(d) அரசாங்கத்திற்கு விதப்புரைகளை வழங்கல் –

(i) தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் ஆகியன, பெண்களின் உரிமைகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சர்வதேச நியமங்களுக்கு அமைவாக உள்ளன என்பதை உறுதிப்படுத்து எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக

(ii) பெண்களின் உரிமைகளை மதிப்பதற்காக, மேம்படுத்துவதற்காக, பாதுகாப்பதற்காக மற்றும் நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படுத்தப்படும் சட்டவாக்க உருவாக்கம் மற்றும் நிர்வாகப் பணிப்புரைகள் தொடர்பாக;

(e) சகல மட்டங்களிலும் அரச அமைப்புக்களின் நியதிச்சட்ட அமைப்புக்களின் செயற்பாட்டு நிறுவனங்களின் அரசாங்க அமைப்புக்களின் மற்றும் அதிகாரசபைகளின் சட்டவாக்கம், கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் பெண்களின் உரிமைகள் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்திற்காக அவற்றினைக் கண்காணித்து, மதிப்பிட்டு, சம்பந்தப்பட்ட அமைப்புக்குப் பரிந்துரைகளை வழங்கல்;

(f) பெண்களின் உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளுடன் இயைபுறுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும் பெண்களின் உரிமைகளை மதித்து அனுஷ்டிப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனும் நடைமுறைகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்து ஆராய்தல்;

(g) பொதுவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் போஷிப்பதற்காகவும் முறைப்பாடுகளைக் கையாளுவது தொடர்பாக ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்காகவும் அரச நிறுவனங்கள், அமைப்புக்கள் அல்லது அதிகாரசபைகளுடன் தொடர்புற்று இடையீடு மேற்கொள்ளல்;

(h) ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகளினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினை இல்லாதொழித்தல் பற்றிய சமவாயத்தின் கீழ் அரசு கொண்டுள்ள கடப்பாடுகளுக்கு இயைபுறுவதையும் அவற்றினை அடைந்துகொள்வதையும் தனியார் துறையினர் அதற்கு இயைபுறுவதை உறுதிப்படுத்தும் அரசின்

	கடமையினையும் கண்காணித்தல்; (i) தனியார் தொழில்முனைவுகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கைகளும் நடைமுறைகளும் பெண்களின் உரிமைகளுடன் எந்த அளவுக்குத் தொடர்புறுகின்றன என்பதைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல்; (j) பெண்களின் உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாத்தலை முன்னெடுத்துச் செல்வதில் ஆய்வுகளைப் பெறுப்பேற்றல் மற்றும் பெண்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் கல்வியறிவினை வழங்கவும் ஆய்வுகளைப் பெறுப்பேற்றல்.
	பகுதி III **பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மன்**
பெண்களின் உரிமைகளுக்காக ஒம்புட்ஸ்மனை நியமித்தல்.	**9**. (1) ஆணைக்குழுவின் பணியாளர்களில் பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மன் என அறியப்படும் ஒருவர் நியமிக்கப்படுவார் என்பதுடன் பால்நிலை அடிப்படையிலான சமத்துவமின்மையுடன் தொடர்புடைய முறைப்பாடுகளையும் அல்லது பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பான முறைப்பாடுகளையும் இவர் பெற்றுக்கொள்வார். (2) உபபிரிவு (1) இற்கு அமைவாக பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மன் பதவியினை வகிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நபர் சிறந்த நற்பெயர் உடையவராகவும் மனித உரிமைகள், சட்டம், மத்தியஸ்தம் மற்றும் பிணக்குத் தீர்வு ஆகியவற்றில் நிரூபிக்கப்பட்ட ஆற்றல் உடையவராகவும் இருப்பார். (3) பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான அல்லது பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பான நிகழ்வுக்கு உட்பட்டுள்ள எந்த நபரும் அல்லது அது பற்றி அறிந்த எந்த நபரும் பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மனிடம் முறைப்பாடு செய்யலாம். (4) பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மன் அவர் பெற்றுக்கொண்ட சகல முறைப்பாடுகள் தொடர்பாகவும் அவற்றினைப் பெற்றுக்கொண்ட ஒழுங்கினில் அமைந்த பதிவினைப் பேணுவதுடன் ஒவ்வொரு முறைப்பாட்டினதும் உண்மைகள் பற்றி விசாரணையினை மேற்கொள்வார். (5) முறைப்பாடு தொடர்பான விசாரணை முடிவடைந்ததும் பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மன் ஆணைக்குழுவிற்கு அறிக்கை ஒன்றினையும் பரிந்துரைகளையும் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முறைப்பாட்டாளருக்கு இருக்கும் நிவாரண வழிகளையும் அனுப்பிவைப்பார். இந்தச் சட்டத்தின் பகுதி iv இற்கு அமைவாக எடுக்கப்படவுள்ள நடவடிக்கையினைத் தீர்மானிப்பதில் ஆணைக்குழு பரிந்துரைகளைக் கவனத்தில்கொள்ளும். (6) பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மனின் பதவியின் நோக்கெல்லைகள், செலுத்தப்படவேண்டிய ஊதியம், பதவியில் இருந்து

	அகற்றப்படும் விதம் உள்ளிட்ட பதவி நிபந்தனைகள் மற்றும் ஒம்புட்ஸ்மன் இயைபுறவேண்டிய ஒழுக்கக் கோவை ஆகியவற்றினைக் குறித்துரைக்கும் ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படலாம்.
	பகுதி IV **ஆணைக்குழுவின் விசாரணை மற்றும் ஆய்வுக்கான அதிகாரங்கள்**
உறுப்புரை 126 இற்கு அமைவாக நோக்கெல்லை நடைமுறைகள்.	**10**. (1) பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பாக அரசியலமைப்பின் உறுப்புரை 126 இற்கு அமைவாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றினை விசாரிக்கையில் அது தொடர்பான எந்த விடயத்தினையும் விசாரித்து அறிக்கையிடுவதற்காக ஆணைக்குழுவிற்கு உயர் நீதிமன்றம் ஆற்றுப்படுத்தலாம். (2) அவ்வாறான ஆற்றுப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் உபபிரிவு (1) இன் கீழ் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள எந்த விடயம் தொடர்பாகவும் ஆணைக்குழு விசாரித்து அறிக்கையிடும். (3) உபபிரிவு (1) இன் கீழ் உயர் நீதிமன்றம் ஆணைக்குழு தொடர்பாக ஒரு பரிந்துரையினை மேற்கொள்ளுமிடத்து, அவ்வாறான பரிந்துரைத் திகதியில் இருந்து ஆரம்பித்து உயர் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதியில் முடிவடையும் காலப்பகுதியானது, உறுப்புரை 126 இன் பந்தி (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மாத காலப்பகுதியினைக் கணக்கிடுகையில் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. (4) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆணைக்குழுவினால் விசாரணை அல்லது ஆய்வு மேற்கொள்ளப்படுகையில் இந்தச் சட்டத்தினால் பாதுகாக்கப்படும் பெண்களின் உரிமைகளின் நோக்கெல்லை அல்லது ஆளுகை தொடர்பான கேள்வி எழுந்தால், அவ்வாறான கேள்வியினை ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தின் அது தொடர்பான தீர்மானத்தினைப் பெறுவதற்காக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தலாம்.
பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு வலுவளிக்கப்பட்ட ஆணைக்குழு	**11.** (1) ஆணைக்குழு அதன் சொந்தப் பிரேரணை மூலம் அல்லது பிரிவு 11 இன் கீழ் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பான விசாரணையினை மேற்கொண்டு ஆராயலாம் மற்றும் பிரேரணைத் திகதியில் இருந்து அல்லது விண்ணப்பத் திகதியில் இருந்து மூன்று மாதங்களினுள் இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவினால் விசாரணை நடத்தப்படச் செய்யலாம்: பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பாக ஏற்கனவே ஏதாவது நீதிமன்றத்தில், நியாயமன்றில், அல்லது குறிப்பிட்ட காலத்திற்கென அரசியலமைப்பினால் அல்லது வேறு சட்டத்தினால் உருவாக்கப்பட்ட நிறுவனத்தில் நிவாரணத்தினைக் கோரியிருந்தால், அவ்வாறான விண்ணப்பத்தினை ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளாது.

	(2) உபபிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட குழு, அதன் விசாரணைகளைப் பூர்த்திசெய்ததன் பேரில் ஆணைக்குழுவிற்கு ஓர் அறிக்கையினைச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான அறிக்கையினைப் பரிசோதித்த பின்னர், பெண்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதா அல்லது மீறப்படவுள்ளதா என்ற இறுதித் தீர்மானத்தினை ஆணைக்குழு எடுக்கும். (3) உபபிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு ஆணைக்குழுவின் நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செலுத்தப்படும் என்பதுடன் இவ்வாறான கொடுப்பனவுகள் நிதி அமைச்சின் ஒத்திசைவுடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். (4) உபபிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழு அமைக்கப்படும் விதத்தினைக் குறித்துரைத்தும் குழுவிற்கு நியமிக்கப்படும் நபர்களின் தேவைப்படுத்தப்படும் தகைமைகளைக் குறித்துரைத்தும் இந்தப் பிரிவு தொடர்பாக நடத்தப்படுகின்ற விசாரணை தொடர்பாகக் குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் அமைச்சரினால் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்படலாம்.
பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமையினை விசாரிப்பதற்கான விண்ணப்பம்	**12**. பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பாகப் பாதிக்கப்பட்டுள்ள எப்பெண்ணும் (இதனகத்துப் பின்னர் ''பாதிக்கப்பட்ட பெண்'' எனக் குறிப்பிடப்படுவார்) அல்லது அப்பெண்ணின் சார்பில் செயற்படும் எந்த நபரும் பிரிவு 10 இன் உபபிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அவ்வாறான மீறல் இடம்பெற்ற ஒரு மாதத்தினுள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்து இதனகத்து வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி பெண்களின் உரிமைகள் மீறப்பட்டமை அல்லது மீறப்படவுள்ளமை தொடர்பாக விசாரித்து ஆராயுமாறு ஆணைக்குழுவினை வேண்டலாம்.
விசாரணையின் போது அல்லது ஆய்வின் போது வாதங்களை முன்வைக்க இரண்டு தரப்புக்கும் வாய்ப்பு வழங்கப்படலாம்.	**13.** (1) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணை மற்றும் ஆய்வில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் பாதிக்கப்பட்டவரின் உரிமைகளை மீறிய நபரும் தம் தரப்பு நியாயங்களைக் கூறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.
விசாரணை முடிவுற்ற பின்னர் எடுக்கப்படவுள்ள படிகள்.	**14.** (1) பிரிவு 10 இன் கீழ் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணை பாதிக்கப்பட்டவரின் உரிமை மீறப்பட்டமையினை அல்லது மீறப்பட உள்ளமையினை வெளிக்கூறாவிட்டால், விடயங்களை ஆணைக்குழு பதிவுசெய்து அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் விசாரணை தொடங்கப்பட்டால் அது விண்ணப்பதாரிக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.
	(2). பிரிவு 10 இன் கீழ் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணை பாதிக்கப்பட்டவரின் உரிமை மீறப்பட்டமையினை அல்லது மீறப்பட உள்ளமையினை வெளிக்கூறினால், ஆணைக்குழுவானது – (a) முறைப்பாடு செய்யப்பட்ட குறையினை மத்தியஸ்தத்தின் மூலம் செயற்திறனுடன் தீர்க்கலாம் என்ற அபிப்பிராயத்தினை ஆணைக்குழு கொண்டிருந்தால் ----- பிரிவின் படி விடயம் மத்தியஸ்தத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்பட்ட மத்தியஸ்தரின் முன் சமூகமளிக்குமாறு தரப்பினர் வேண்டப்பட வேண்டும்; அல்லது

	(b) உரிமை மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்பட உள்ளது என்ற ஆணைக்குழுவின் அபிப்பிராயத்திற்கு எவ்விதமாகப் பரிகாரம் காணப்படலாம் அல்லது அது எவ்வாறு தடுக்கப்படலாம் என்ற பரிந்துரை பொருத்தமான அதிகார அமைப்புக்கு அனுப்பிவைக்கப்படும்; அல்லது (c) மீறல் சட்டநடவடிக்கையினை நியாயப்படுத்துகின்றது என ஆணைக்குழு கருதினால், விசாரணயில் இருந்து கண்டறிந்தவற்றுக்கு மேலதிக நடவடிக்கை தேவைப்படுகின்றது எனக் குறிப்பிட்டு நடத்தப்பட்ட விசாரணை பற்றிய ஓர் அறிக்கை சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்.
	(3) பிரிவு 11 இன் கீழ் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட விசாரணை பாதிக்கப்பட்டவரின் உரிமை மீறப்பட்டமையினை அல்லது மீறப்பட உள்ளமையினை வெளிக்கூறினால், மற்றும்- (a) விடயத்தினை மத்தியஸ்தத்திற்காக ஆற்றுப்படுத்துவது பொருத்தமானது என்ற அபிப்பிராயத்தினை ஆணைக்குழு கொண்டிருந்தால் ஆனால் சகல தரப்புக்களும் அல்லது எவையேனும் தரப்பு அதற்கு எதிர்ப்பினைக் காட்டினால்; அல்லது (b) மத்தியஸ்தம் வெற்றியளிக்காவிட்டால், ஆணைக்குழு – (i) அவ்வாறான மீறலைத் தடுக்கும் அல்லது அதற்குப் பரிகாரம் காணும் நோக்கத்துடன் அது உகந்தது என நினைக்கும் பரிந்துரையினைச் சம்பந்தப்பட்ட பொருத்தமான அதிகார அமைப்புக்கு அல்லது நபருக்கு அல்லது நபர்களுக்கு வழங்கலாம். (ii) பெண்களின் உரிமைகளை மீறிய நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை அல்லது ஏனைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனப் பொருத்தமான அதிகார அமைப்புக்குப் பரிந்துரைத்தல்; (iii) அவ்வாறான பரிகாரத்தினை வழங்குதல் அல்லது சூழ்நிலைக்கு நியாயமானது மற்றும் ஒப்புரவானது எனக் கருதப்படும் பணிப்புரையினை விடுத்தல்.
	(4) மேலே உபபிரிவு (2) இற்கு அமைவாக ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதியில் இருந்து பதினான்கு நாட்களினுள் ஆணைக்குழு பாதிக்கப்பட்ட நபருக்கு அறிவிக்க வேண்டும்.
மத்தியஸ்தம்	**15**. (1) பிணக்கினை ஆணைக்குழு மத்தியஸ்தத்திற்காக ஆற்றுப்படுத்துகையில், மத்தியஸ்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் மத்தியஸ்த நடைமுறைகளை நடத்துவதற்குப் பொருத்தமான விதிகளுக்கு இயைபுற்று - (a) பிணக்கினைச் சுமுகமாகத் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் தரப்புக்களுக்கு இடையில் மத்தியஸ்தம் செய்வர்; (b) குறிப்பிட்ட மத்தியஸ்தர் அல்லது மத்தியஸ்தர்கள் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து அறுபது நாட்கள் காலப்பகுதியினுள் மத்தியஸ்தச்

	செயன்முறையினைப் பூர்த்திசெய்வர்; மற்றும் (c) மத்தியஸ்தச் செயன்முறையின் போது, மத்தியஸ்தர்களுக்காக நடத்தைக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களுக்கு இயைபுறவேண்டும்.
	(2) மத்தியஸ்த நடைமுறைகளை மேற்கொள்வதற்குப் பிரயோகிக்கத்தக்க நடைமுறை விதிகளை நிர்ணயித்து ஆணைக்குழு விதிகளை உருவாக்கலாம். (3) மத்தியஸ்தருக்குத் தேவைப்படும் தகைமைகள், பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்ய நியமிக்கப்படும் மத்தியஸ்தர் குழாமினைத் தயார்படுத்தல், மத்தியஸ்தர்களுக்குப் பிரயோகிக்கத்தக்க நியமங்களை நிர்ணயிக்கும் நடத்தைக் கோவை ஆகியவை ஒழுங்குவிதியினால் குறித்துரைக்கப்படும்.
மத்தியஸ்தம் நிறைவுற்றதும் மேற்கொள்ளப்படும் நடைமுறைகள்	**16**. (1) மத்தியஸ்தத்தின் மூலம் தரப்பினருக்கு இடையிலான பிணக்குக்குத் தீர்வு காணப்பட்டால், தரப்பினரால் இணங்கப்பட்ட தீர்வின் விதிகள் மத்தியஸ்தர்களால் ஓர் உடன்படிக்கை வடிவில் எழுத்தில் வடிக்கப்பட்டு தரப்பினரால் ஒப்பமிடப்பட வேண்டும் என்பதுடன் தரப்பினர்கள் அதன் பின்னர் அதிலுள்ள கடப்பாடுகளுக்கு இயைபுறவேண்டும். உடன்படிக்கையின் பிரதியினை மத்தியஸ்தர்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்க வேண்டும்.
	(2) இந்தப் பிரிவின் கீழ் மத்தியஸ்தத்திற்காக ஒரு விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டு தீர்வு காணப்படுகையில், அவ்வாறான தீர்வின் விதிகளுக்குச் செயலூக்கம் அளிப்பதற்கு அவசியமாக இருக்கக்கூடிய அவ்வாறான பணிப்புரைகளைக் குழு விதிக்கும் (நட்டஈட்டுக் கொடுப்பனவு உள்ளடங்கலாக).
	(3) மத்தியஸ்தச் செயன்முறை வெற்றியளிக்காதவிடத்து, அல்லது ஒரு தரப்பு மத்தியஸ்தச் செயன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கையில், மத்தியஸ்தர் இதற்கு அமைவாகச் சூழ்நிலையினை ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடவேண்டும்.
உடன்படிக்கையில் உள்ள விதப்புரைகளுக்குச் செயலூக்கமளிப்பதற்கு ஆணைக்குழு தரப்புக்களைத் தேவைப்படுத்தலாம்.	**17**. (1) ஆணைக்குழுவிற்கு உடன்படிக்கை அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பிணக்கிலுள்ள தரப்புக்களுக்கும் உடன்படிக்கையில் அடங்கியுள்ள தீர்வில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு யாராவது சம்பந்தப்பட்ட நபர், நபர்களின் குழு, அரசாங்கத் திணைக்களம் அல்லது நிறுவனத்திற்கு அவ்வாறான தீர்மானங்கள் அல்லது விதப்புரைகளுக்குச் செயலூக்கமளிப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஆணைக்குழு பணிக்கும் (2) உபபிரிவு (1) இல் குறித்துரைக்கப்பட்ட அவ்வாறான தீர்மானங்கள் அல்லது விதப்புரைகளுக்குச் செயலூக்கமளிப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட நபர், நபர்களின் குழு, அரசாங்கத் திணைக்களம் அல்லது நிறுவனத்தினால் அவ்வாறான தீர்மானங்கள் அல்லது விதப்புரைகளுக்குச் செயலூக்கமளிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாமலிருப்பின், அதற்கான காரணத்தினைச் சுட்டிக்காட்டி அவர்கள் அதனை உடனடியாக ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவேண்டும்.
இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணை	**18**. (1) விசாரணை அல்லது ஆய்வு நோக்கத்திற்காக ஆணைக்குழு இந்தச்

அல்லது ஆய்விற்கான அதிகாரங்கள்.	சட்டத்தின் கீழ் பின்வருவனவற்றுக்கான அதிகாரத்தினைக் கொண்டிருக்கும் – (a) அவ்வாறான எழுத்திலான அல்லது வாய்மூலமான சகல சான்றுகளையும் பெற்று, ஆணைக்குழு பெறுவதற்கு அல்லது பரிசீலிப்பதற்கு அவசியமானது அல்லது விரும்பத்தக்கது என நினைக்கும் விதத்தில் சாட்சிகளான சகல நபர்களையும் பரிசீலித்தல்; (b) எழுத்திலான அல்லது வாய்மூலமான சான்றுகளை சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்படுத்தலின் பேரில் வழங்குமாறு தேவைப்படுத்தல். இவ்வாறான சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்படுத்தல் இவ்வாறான சாட்சி நீதிமன்றத்தில் சாட்சியமளித்தால் சாட்சியிடமிருந்து தேவைப்படுத்தப்படும் அதே சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்படுத்தலாக இருக்கும் என்பதுடன் இவ்வாறான சத்தியப்பிரமாணத்தினை அல்லது உறுதிப்படுத்தலை ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் ஒவ்வொரு சாட்சியும் ஆணைக்குழுவினால் இது தொடர்பாக அதிகாரமளிக்கப்படும் அதிகாரியின் முன் வழங்கத் தேவைப்படுத்தல்; (c) இலங்கையில் வசிக்கும் எந்தவொரு நபரையும் ஆணைக்குழுவின் எந்த நடைமுறையிலும் சாட்சியமளிக்கக் கலந்துகொள்ளுமாறு அழைப்பதற்கும் அத்தகைய நபரின் வசம் உள்ள எந்தவொரு ஆவணம் அல்லது பிற பொருட்களை வழங்குமாறு கோருவதற்கும் அத்தகைய நபரைச் சாட்சியாக ஆராய்வதற்கும் ஏதேனும் ஆவணம் அல்லது பிற பொருட்களை வழங்குமாறும் கோருதல். (d) சான்றுக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எழுத்திலான அல்லது வாய்மூலமான எந்தச் சான்றும் பிணக்கிற்கு முக்கியமானதாக இருந்து சிவில் அல்லது குற்றவியல் வழக்கு விசாரணையில் அது அனுமதிக்கப்படாததாக இருக்கையில், அதனை அனுமதித்தல் (e) அவ்வாறான விசாரணை அல்லது ஆய்வுக்குப் பொதுமக்களை அனுமதித்தல் அல்லது விலக்கிவைத்தல்
	(2) உபபிரிவு (1) இன் கீழ் அழைக்கப்படும் ஒவ்வொரு நபரும், அவ்வாறான நபர் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்திற்கு அமைவாகத் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வெளிக்கூறுவதற்குத் தடைவிதிக்கப்படாதவராக இருந்தால், அவ்வாறான அழைப்பாணைக்கு இயைபுறுவது அவரின் கடமையாகும்.
ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் நபரின் சிறப்புரிமைகள்	**19**. (1) ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் எந்தவொரு நபரும், அவ்வாறான ஒவ்வொரு சான்று தொடர்பாகவும், நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கும் சாட்சிக்கு உள்ள அதே சிறப்புரிமைக்கான உரித்தினைக் கொண்டிருப்பார்.
	(2) வாய்மூலமான அல்லது எழுத்திலான எச்சான்று தொடர்பாகவும் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கும் எந்தவொரு நபரும் எந்தவொரு நீதிமன்றத்திலும் சிவில் அல்லது குற்றவியல் தொடர்பான எந்த நடவடிக்கைக்கும் வழக்கு விசாரணைக்கும் அல்லது ஏனைய நடவடிக்கைமுறைகளுக்கும்

	உட்படக்கூடியவராக இருத்தலாகாது;
	(3) ஆணைக்குழுவிடம் அல்லது ஆணைக்குழுவின் முன் எந்த நபராலும் வழங்கப்பட்ட எச்சாட்சியம் அல்லது வாக்குமூலம் அந்த நபருக்கு எதிராகச் சிவில் அல்லது குற்றவியல் நீதிமன்றத்தில் ஏதாவது நடவடிக்கையில், சட்ட நடவடிக்கையில் அல்லது வேறு ஏதாவது நடவடிக்கைமுறையில் அவருக்கு எதிராக அனுமதிக்கப்பட முடியாததாகும்: இந்தச் சட்டத்தின் பிரிவு 17 உடன் சேர்த்து வாசிக்கப்படும் தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI (அத்தியாயம் 19) இன் கீழான எக்குற்றத்திற்கான எச்சட்ட நடவடிக்கையினையும் அல்லது தண்டனையினையும் இந்தப் பந்தியில் உள்ள ஏற்பாடுகளில் எவையும் பாதிக்கக்கூடாது அல்லது பாதிப்பதாகக் கருதப்படக்கூடாது: தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI (அத்தியாயம் 19) இன் கீழான எக்குற்றத்திற்காகவும் அந்தச் சாட்சியினைச் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நோக்கத்திற்காக ஆணைக்குழுவின் சாட்சியமளிக்கும் எந்தவொரு சாட்சியினதும் பெயர், சாட்சியம் அல்லது சாட்சியத்தின் பகுதியினை வெளியிடுவதை அல்லது வெளிக்கூறுவதை இந்தப் பந்தியின் ஏற்பாடுகளில் உள்ள எவையும் தடுக்காது அல்லது தடுப்பதாகக் கருதப்படலாகாது.
அழைப்பாணை தலைவரால் வழங்கப்படும்	**20.** (1) ஆணைக்குழுவினால் வழங்கப்படும் ஒவவொரு அழைப்பாணையும் ஆணைக்குழுவின் தலைவரால் வழங்கப்படும்.
	(2) அழைப்பாணையில் பெயர் உள்ளவருக்கு அழைப்பானை வழங்கப்படலாம், அது சாத்தியமற்றதாயின் அவரின் கடைசியாக அறிப்பட்ட வதிவிடத்தில் அதனை விநியோகிக்கலாம் அல்லது அந்த நபரின் வதிவிடத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
	(3) அழைப்பாணை வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும் அழைப்பாணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன் தோற்றி ஆணைக்குழு கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் அல்லது அவரிடம் இருந்து தேவைப்படுத்தப்படும் அவர் வசமுள்ள அல்லது அவரின் அதிகாரத்தில் உள்ள அவ்வாறான ஆவணங்களை அல்லது பொருட்களை வழங்கவேண்டும்.
ஆணைக்குழுவினை அவமதித்தல்	**21.** (1) ஆணைக்குழு தொடர்பில் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படாது தவிர்க்கப்பட்ட செயல், ஆணைக்குழுவின் முன்பானதாக அல்லது வேறுவிதமாக இருந்தாலும், உயர் நீதிமன்றத்தின் முன் அவ்வாறு நிறைவேற்றப்பட்டிருந்தால் அவ்வாறான நீதிமன்ற அதிகாரத்திற்கெதிரான குற்றமாக, அவமதிப்பாக அல்லது அகௌரவமாகக் கருதப்படுவது போன்று ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு எதிரான குற்றமாக, அவமதிப்பாக அல்லது அகௌரவமாகக் கருதப்படும். (2) ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட ஒவ்வொரு அவமதிப்புக் குற்றமும் அல்லது அகௌரவமும் நீதிமன்றத்திற்கு எதிராக அல்லது

	உயர் நீதிமன்றத்திற்கு எதிராக அவ்வாறு இழைக்கப்பட்ட குற்றம் போன்று உயர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படத்தக்கதாகும் என்பதுடன் அவ்வாறான ஒவ்வொரு குற்றத்தினையும் விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் இத்தால் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்படுகின்றது.
	(3) யாராவது நபர், அவர்– (a) இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் மற்றும் இடத்தில் ஆணைக்குழுவின் முன் காரணமின்றித் தோற்றுவதற்குத் தவறினால்; (b) சத்தியப்பிரமானம் எடுக்க அல்லது உறுதிப்படுத்த மறுத்தால், அல்லது, சத்தியப்பிரமானம் எடுத்து அல்லது உறுதிப்படுத்தி ஆனால் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படும் விடயம் தொடர்பில் கேட்கப்படும் எக்கேள்விக்கும் காரணமின்றி பதிலளிக்க மறுத்தால்; அல்லது (c) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் அல்லது எழுத்திலான கட்டளையின் அல்லது பணிப்புரையின் தேவைப்பாடுகளுக்கு இயைபுறுவதற்குக் காரணமின்றி மறுக்கையில்; (d) இந்தச் சட்டத்தின் கீழ் யாருக்கு அழைப்பாணை வழங்கப்படுகின்றதோ அவர், ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் விசாரிக்கப்படுகின்ற அல்லது ஆராயப்படுகின்ற விடயத்தின் உண்மையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்றதான தன் வசம் உள்ள அல்லது தனது அதிகாரத்தில் உள்ள ஏதாவது ஆவணத்தினை அல்லது ஏதாவது பொருளினைத் தக்க காரணமின்றி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கும் காட்டுவதற்கும் தவறினால்; அல்லது (e) ஆணைக்குழுவின் விதப்புரைகள் அல்லது தீர்மானத்திற்கு இயைபுறத் தவறினால், ஆணைக்குழுவின் அதிகாரத்தினை அவமதித்த குற்றத்திற்கு அலலது அகௌரவப்படுத்திய குற்றத்திற்கு ஆளாவார்.
	(4) உபபிரிவு (3) இன் பந்தி (b) அல்லது (c) இன் கீழ் அவமதித்த குற்றத்தினை ஒரு நபர் இழைத்துள்ளார் என ஆணைக்குழு தீர்மானிக்கையில், அவ்வாறான தீர்மானத்தினைக் குறிப்பிடும் ஒரு சான்றிதழை ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கலாம்: அவ்வாறான ஒவ்வொரு சான்றிதழும் ஆணைக்குழுவின் தலைவரினால் ஒப்பமிடப்படும்.
	(5) உயர் நீதிமன்றம் இந்தப் பிரிவில் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளாவாறு எடுப்பதற்கு உகந்தது என நினைக்கும் அவமதிப்புக் குற்றத்திற்கான

	தண்டனைக்கான எந்தச் சட்ட நடவடிக்கையிலும், உபபிரிவு (4) இன் கீழ் ஒப்பமிடப்பட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட சான்றிதழ் எனக் கூறப்படும் எந்த ஆவணமும் – (a) சான்றாகப் பெறப்பட வேண்டும், மேலும் மாற்றாக எதுவும் வழங்கப்படாதவிடத்து, மேலதிக ஆதாரமின்றி அவ்வாறான சான்றிதழாகக் கருதப்படும் (b) சான்றிதழில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானம் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டது என்பதற்கான மற்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகளாக இருக்கும் என்பதற்கான சான்றாக இருக்கும்.
	(6) ஆணைக்குழுவின் அதிகாரத்திற்கு எதிரான அவமதிப்புக்கான குற்றத்திற்கான அல்லது அகௌரவத்திற்கான குற்றத்திற்கான தண்டனையாக இந்தப் பிரிவில் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளவாறாக எடுக்கப்பட்ட எந்தச் சட்ட நடவடிக்கையிலும், இந்தச் சட்டத்திற்கு முரணானவை எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவின் எந்த உறுப்பினரும் அவரின் சொந்த விருப்பத் தெரிவினாலன்றிச் சாட்சியாக அழைக்கப்படலாகாது அல்லது பரிசீலிக்கப்படலாகாது
	பகுதி V **ஆணைக்குழுவின் நிதி**
பெண்களுக்கான தேசிய நிதியத்தினை உருவாக்கல்	**22**. (1) பெண்களுக்கான தேசிய நிதியம் என அழைக்கப்படும் (இதனகத்துப் பின்னர் "நிதியம்" என அழைக்கப்படும்) நிதியம் ஒன்று இச்சட்டத்தின் நோக்கத்திற்காக நிறுவப்படும்.
	(2) நிதியத்திற்குள் கொடுப்பனவாகச் செலுத்தப்படுபவை – (a) ஆணைக்குழுவின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்திற்குக் காலம் ஒதுக்கப்படும் அவ்வாறான சகல பணத் தொகைகளும்; (b) வெளி வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள மூலத்தில் இருந்து உதவியாக, பரிசாக, கொடைகளாக, மானியங்களாக, வேண்டுகோள் விடுக்கப்பட்ட நன்கொடைகளாக ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் அவ்வாறான சகல பணத் தொகைகளும்; (c) ஆணைக்குழுவின் ஏதாவது அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை விற்பனை செய்ததால் ஆணைக்குழுவுக்குக் கிடைத்த அவ்வாறான சகல பணத் தொகைகளும்.
	(3) நிதியத்தில் இருந்து செலுத்தப்படக்கூடியவை – (a) இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள், கடமைகள்

	மற்றும் செயற்பாடுகளைப் பயன்படுத்துகையில், நிறைவேற்றுகையில் மற்றும் வழங்குகையில் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட எச்செலவிற்குமான கொடுப்பனவாகத் தேவைப்படுத்தப்படும் அவ்வாறான சகல பணத் தொகையும்; (b) பெண்களின் உரிமைகளுக்காகத் தன்னிகரில்லாச் சேவையினை வழங்கியமையினைப் பாராட்டி எந்தவொரு தனிநபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் வழங்குவதற்காக ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அவ்வாறான சகல பணத் தொகையும்; அல்லது (c) இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் நிதியத்தில் இருந்து செலுத்தப்படத் தேவைப்படுத்தப்படும் அவ்வாறான சகல பணத் தொகைகளும்.
ஆணைக்குழு அதன் பணத்தினை முதலீடு செய்யலாம்	**23**. ஆணைக்குழுவிற்கு உடனடியாகத் தேவைப்படாத ஆணைக்குழுவிற்குச் சொந்தமான பணத் தொகையினை ஆணைக்குழு தீர்மானிக்கும் விதத்தில் அது முதலீடு செய்யலாம்.
கணக்காய்வும் கணக்குகளும்	**24** (1) ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய சகல கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய உரிய கணக்குகளைப் பேணுவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்
	(2) ஆணைக்குழுவின நிதி வருடம் கலண்டர் வருடமாக இருக்கும்.
	(3) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் உறுப்புரை 154 இன் ஏற்பாடுகள் ஆணைக்குழுவின் கணக்குகளின் கணக்காய்வுக்குப் பிரயோகிக்கப்படும்.
வருடாந்த அறிக்கை	**25**. ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் ஆணைக்குழு அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட சகல விடயங்களின் பட்டியலடங்கிய, அவற்றுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய மற்றும் அவ்வாறான ஒவ்வொரு ஆற்றுப்படுத்தலுக்காகவும் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரைகள் அடங்கிய மற்றும் அதன் குறிக்கோள்களின் அடைவுகள் அடங்கிய ஓர் அறிக்கையினைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.
	பகுதி VI **ஆணைக்குழுவின் பணியாளர்கள்**
நிறைவேற்றுப் பணிப்பாளர்	**26.** (1) ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளராகத் தகைமைவாய்ந்த நபர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்பதுடன் அவர் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு இயைபுற்று ஆணைக்குழுவின் பொதுவான பணிப்புரை மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்படுவார் மேலும் ஆணைக்குழுவிற்குப் பொறுப்புக்கூறுவார். பதவிக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகள், பதவிக் காலம் மற்றும் ஊதியம் ஆகியவை ஒழுங்குவிதியினால் தீர்மானிக்கப்பட்டவாறாக இருக்கும்.

	(2) கவுன்சிலின் கூட்டத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமூகமளிக்கலாம் என்பதுடன் அவ்வாறான கூட்டங்களில் பேசலாம் ஆனால் அவ்வாறான எந்தக் கூட்டங்களிலும் வாக்களிப்பதற்கான உரித்தினைக் கொண்டிருக்க மாட்டார். (3) ஒப்படைக்கப்பட்ட காரணங்களுக்காக, ஆணைக்குழு உபபிரிவு (1) இன் கீழ் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரை அவ்வாறான பதவியில் இருந்து அகற்றலாம்.
ஆணைக்குழுவின் பணியாளர்கள்	**27**. (1) ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உரிய முறையிலும் வினைத்திறன்மிக்க முறையிலும் நிறைவேற்றுவதற்கு அவசியமானது என ஆணைக்குழு நினைக்கும் அவ்வாறான ஏனைய அதிகாரிகளையும் ஊழியர்களையும் ஆணைக்குழு நியமிக்கலாம்.
	(2) ஆணைக்குழு – (a) ஆணைக்குழுவின் எந்த அதிகாரியின் மீதும் அல்லது ஊழியரின் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் அல்லது அவர்களை அகற்றல்; (b) நிதி விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சருடனும் சம்பளங்கள் மற்றும் பதவிநிலை ஆணைக்குழுவுடனும் கலந்தாலோசித்து இவ்வாறான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் ஊதியங்கள் அல்லது சம்பளங்கள் அல்லது ஏனைய கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல்; (c) அவ்வாறான அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சேவைகளின் விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தீர்மானித்தல்; (d) ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் நன்மைக்காக சேமலாப நிதியம் மற்றும் வேறு நலனோம்புகை மற்றும் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்கி அவ்வாறான ஏதாவது நிதியங்கள் அல்லது திட்டங்களுக்குப் பங்களிப்புக்களை வழங்கல்
	(3) ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில், அரச சேவையில் உள்ள எந்த அதிகாரியும் அந்த அதிகாரியின் இணக்கத்துடனும் எந்த அமைச்சின் கீழ் அந்த அதிகாரி பணியாற்றுகின்றாரோ அந்த அமைச்சின் செயலாளர் மற்றும் பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளரினதும் இணக்கத்துடனும் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடிய காலப்பகுதிக்காக ஆணைக்குழுவின் பணியாளராகத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது இதேபோன்ற இணக்கத்துடன் நிரந்தரப் பணியாளராக நியமிக்கப்படலாம்- (a) ஆணைக்குழுவின் பணியாளராக அரச சேவையின் எந்த அதிகாரியும் தற்காலிகமாக நியமிக்கப்படுகையில், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 14 இன் உபபிரிவு (2) இன் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அவ்வாறான அதிகாரி தொடர்பாகப் பிரயோகிக்கப்படும்.

	(b) ஆணைக்குழுவின் நிரந்தரப் பணியாளராக அரச சேவையில் உள்ள எந்த அதிகாரியும் நியமிக்கப்படுகையில், 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் பிரிவு 14 இன் உபபிரிவு (2) இன் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அவ்வாறான அதிகாரி தொடர்பாகப் பிரயோகிக்கப்படும். (c) குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அரசாங்கத்தில் சேவையாற்றுவதற்காக இணங்கி அரசாங்கத்துடன் எவ்விதமான ஒப்பந்தத்திலும் நுழைந்துள்ள எந்த நபரினையும் ஆணைக்குழு நியமிக்கையில், அந்த நபர் ஆணைக்குழுவிற்கு ஆற்றும் எவ்விதமான சேவைக் காலமும் அவ்வாறான ஒப்பந்தத்தின் கீழ் அந்த நபர் அவரின் கடமையினை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றும் சேவையாகக் கருதப்படும்.
	(4) ஆணைக்குழுவுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள எந்த அதிகாரிக்கும் அல்லது அதிகாரிகளுக்கும் ஆணைக்குழு அதன் அதிகாரங்களில், கடமைகளில் அல்லது செயற்பாடுகளில் எவற்றினையாவது ஆணைக்குழுவின் செயற்திறன்மிக்க செயற்பாட்டுக்குத் தேவைப்படும் அளவிற்கு ஒப்படைக்கலாம் என்பதுடன் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளவர்கள் அவ்வாறான அதிகாரங்களை ஆணைக்குழுவின் பணிப்புரை மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நிறைவேற்றலாம். இந்தப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் எவ்விதமான ஒப்படைப்பும் ஆணைக்குழுவினால் மீளப்பெறப்படலாம்.
	பகுதி VII **பொதுவான ஏற்பாடுகள்**
ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவர்	**28.** ஆணைக்குழுவின் உறுப்பினர்களும் ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளும் ஊழியர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் (அத்தியாயம் 19) அர்த்தத்தினுள்ளும் அதன் நோக்கங்களிற்காகவும் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்படுவர் என்பதுடன் இச்சட்டத்தின் கீழ் நடத்தப்படும் ஒவ்வொரு விசாரணையும் ஆய்வும் அந்தக் கோவையின் அர்த்தத்தினுள் நீதிமுறை நடவடிக்கைமுறையாகக் கருதப்படும்
ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் (அத்தியாயம் 26) அர்த்தத்தினுள் பட்டியல்கள் நிறுவனமாகக் கருதப்படும்	**29.** ஆணைக்குழுவானது இலஞ்சச் சட்டத்தின் (அத்தியாயம் 26) அர்த்தத்தினுள் பட்டியல்கள் நிறுவனமாகக் கருதப்படும் மேலும் அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் இதற்கமைவாகப் புரிந்துகொள்ளப்படும்.
ஆணைக்குழுவின் உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் ஊழியர்களையும் சட்ட நடவடிக்கையில் இருந்து பாதுகாத்தல்	**30.** (1). அவமதிப்புத் தவிர்ந்த காரணங்களுக்காகவன்றி, ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் அல்லது ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் அல்லது ஊழியர்களால் அல்லது வேறு நபரினால் ஆணைக்குழுவிற்கு நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட எச்செயலுக்காகவும் அல்லது செய்யாது தவிர்க்கப்பட்ட எச்செயலுக்காகவும் அவர்களுக்கு எதிராக எவ்விதமான சிவில் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது,
	(2) இந்தச் சட்டத்தின் கீழ் அவமதிப்புக்காக அல்லது குற்றத்திற்காக வழக்குத் தொடுப்பது தவிர்ந்த சந்தர்ப்பங்களில், இந்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால்

	நடத்தப்படும் எந்த விசாரணை அல்லது ஆய்வின் போது ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட எந்த ஆவணத்தினையும் எந்த நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்குமாறோ அல்லது ஆணைக்குழுவின் அவதானத்திற்கு வந்த எந்த விடயத்தினையும் எந்த நீதிமன்றத்திலும் வெளிக்கூறுமாறோ ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அல்லது ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் அல்லது வேறு நபர் தேவைப்படுத்தப்படலாகாது..
	(3) ஆணைக்குழுவினால் எந்த நீதிமன்றத்தின் முன்பும் கொண்டுவரப்பட்ட எந்தச் சட்ட நடவடிக்கையிலும் அல்லது ஆணைக்குழுவிற்கு எதிராக எந்த நீதிமன்றத்தின் முன்பும் கொண்டுவரப்பட்ட எந்தச் சட்ட நடவடிக்கையிலும் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட எச்செலவும் ஆணைக்குழுவின் நிதியில் இருந்து செலுத்தப்படும் என்பதுடன் இவ்வாறான எந்தச் சட்ட நடவடிக்கையிலும் ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்பட்ட எந்தச் செலவும் அல்லது ஆணைக்குழுவினால் அறவிடப்பட்ட எந்தச் செலவும் ஆணைக்குழுவின் நிதியத்தில் பற்று வைக்கப்படும்
	(4) ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் அல்லது ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் அல்லது ஊழியர்களால் அல்லது வேறு நபரினால் இந்தச் சட்டத்தின் கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புரையின் கீழ் செய்யப்பட்ட எச்செயலுக்காகவும் அல்லது செய்ததாகக் கூறப்பட்ட எச்செயலுக்காகவும் அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் கொண்டுவரப்பட்ட எச்சட்ட நடவடிக்கையிலும் அவருக்கு ஏற்பட்ட எச்செலவும், அச்செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் கருதுமிடத்து, ஆணைக்குழுவின் நிதியில் இருந்து செலுத்தப்படும், இல்லாவிடின் அவ்வாறான சட்ட நடவடிக்கையில் அவரிடமிருந்து அச்செலவு அறவிடப்படும்.
ஆணைக்குழுவின் விதிகள்	**31**. இச்சட்டத்தின் கீழ் விதிகள் தேவைப்படுத்தப்படும் சகல விடயங்கள் தொடர்பாகவும் அல்லது விதிகள் உருவாக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்காகவும் ஆணைக்குழு விதிகளை உருவாக்கலாம். இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒவ்வொரு விதியும் **வர்த்தமானியில்** வெளியிடப்படும்.
உறுப்பினர் ஒருவருக்கு எதிராக அலலது அவரின் சொத்துக்கு எதிராகப் பேராணை வழங்கப்பட முடியாது	**32**. ஆணைக்குழுவிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட எந்த நடவடிக்கையிலும் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக அல்லது அவரின் சொத்துக்கு எதிராகப் பேராணை எதையும் வழங்க முடியாது.
குற்றங்கள்	**33**. எந்த நபரும் அவர்– (a) இந்தச் சட்டத்தின் கீழ் எத்தகவலையும் வழங்கத் தவறுகையில் அல்லது அவர் மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுக்கு இயைபுறத் தவறுகையில்; (b) அவரால் வழங்கப்பட்ட எத்தகவலிலும் அல்லது அறிக்கையிலும் அறிந்துகொண்டே ஏதாவது தவறான கூற்றுக்களை வழங்குகையில்; (c) அவரால் வழங்கப்பட்ட எத்தகவலிலும் அல்லது அறிக்கையிலும வேண்டுமென்றே எந்த விடயத்தினையும் தவிர்க்கையில்;

	(d) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதாவது ஒழுங்குவிதி அல்லது விதியினை மீறுகையில்; (e) ஆணைக்குழுவின் உத்தரவு அல்லது பணிப்புரைக்கு இயைபுறத் தவறுகையில்; அவர் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்திற்கான குற்றப்பொறுப்புடையவராவார் என்பதுடன் நீதவான் முன்பான சுருக்கமுறை வழக்கு விசாரணையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகையில் ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத்தண்டனையினையோ அல்லது சிறைத்தண்டனையுடன் கூடிய அபராதத்தினையோ பெற்றுக்கொள்வார்.
நபர்களின் அமைப்புக்களின் குற்றங்கள்	**34.** நபர்களின் அமைப்பொன்றினால் இந்தச் சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றமும் இழைக்கப்படுகையில் – (a) அவ்வாறான நபர்களின் அமைப்பு ஒரு பெருநிறுவனமாக இருக்கையில், ஒவ்வொரு பணிப்பாளரும் செயலாளரும் பெருநிறுவனத்தின் அதிகாரியும் அக்குற்றத்திற்கான குற்றப்பொறுப்பினைக் கொண்டிருப்பர், (b) நபர்களின் அமைப்பு ஒரு நிறுவனமாக இருக்கையில், அந்த நிறுவனத்தின் ஒவ்வொரு பங்காளரும் அக்குற்றத்திற்கான குற்றப்பொறுப்பினைக் கொண்டிருப்பர், குற்றமானது அவ்வாறான பணிப்பாளரின் செயலாளரின் அதிகாரியின் அல்லது பங்காளரின் அறிவுக்கு எட்டாது நிகழ்ந்துள்ளது எனவும் குற்றம் நிகழ்த்தப்படுவதைத் தடுப்பதற்குத் தம்மால் உரிய கவனம் செலுத்தப்பட்டது எனவும் பணிப்பாளரோ, செயலாளரோ, அதிகாரியோ அல்லது பங்காளரோ நிரூபிக்காவிட்டால்
ஒழுங்குவிதிகள்	**35**. (1) மகளிர் அலுவல்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசிப்பின் பேரில் இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்படுவதற்குத் தேவைப்படும் விடயங்கள் தொடர்பில் அல்லது ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கின்றார். (2) உபபிரிவு (1) இனால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பொதுவானதன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் அனைத்தும் தொடர்பாக அல்லது ஏதாவது தொடர்பாக ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படலாம்;- (a) பிரிவு 9 இன் உபபிரிவு (6) இன் நோக்கத்திற்காக, பெண்களின் உரிமைகளுக்கான ஒம்புட்ஸ்மனுக்குப் பிரயோகிக்கத்தக்க நோக்கெல்லை விதிகள், செலுத்தத்தக்க ஊதியம், பதவியில் இருந்து அகற்றப்படும் விதம் உள்ளிட்ட பதவிக் காலம் மற்றும் ஒம்புட்ஸ்மனினால் இயைபுறவேண்டிய ஒழுக்கக் கோவை ஆகியவற்றினைக் குறித்துரைத்தல்; (b) பிரிவு 11 இன் உபபிரிவு (4) இன் நோக்கத்திற்காக, உபபிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினை ஆணைக்குழு நியமிக்கும் விதத்தினை,

	குழுவிற்கு நியமிக்கப்படும் நபர்களுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமையினை, இந்தப் பிரிவு தொடர்பாக நடத்தப்படும் விசாரணை குறித்துக் குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளைக் குறித்துரைத்தல்.
	(3) அமைச்சரினால் உருவாக்கப்படும் ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்ட திகதியில் இருந்து அல்லது அதில் குறித்துரைக்கப்படும் பின்னைய திகதியில் இருந்து செயலூக்கம் பெறும்.
	(4) அமைச்சரினால் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் இயலுமான அளவு விரைவாக வசதிப்படுகையில் பாராளுமன்றத்தின் முன்பாக அங்கீகாரத்திற்காகக் கொண்டுவரப்பட வேண்டும். அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அவ்வாறு அங்கீகாரம் வழங்கப்படாத திகதியில் இருந்து அகற்றப்பட்டதாகக் கருதப்படும் என்பதுடன் அதன் கீழ் முன்பு நிறைவேற்றப்பட்டவற்றிற்குப் பங்கமின்றி மேற்கொள்ளப்படும்
	(5) எந்த ஒழுங்குவிதியும் அகற்றப்பட்டதாகக் கருதப்படும் திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும்.
வியாக்கியானம்	**36.** இந்தச் சட்டத்தில், சூழமைவு வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலே அன்றி – "நபர்" என்பது பெருநிறுவன அல்லது ஒருங்கிணைப்பு நபர்களின் அமைப்பினை உள்ளடக்குகின்றது; "பெண்களின் உரிமைகள்", அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட, சமத்துவத்திற்கான உரிமை மற்றும் பால் மற்றும் பால்நிலை அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமைக்கான உரிமை மற்றும் ஏனைய அடிப்படை உரிமைகள், மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினை இல்லாதொழிப்பது பற்றிய சமவாயத்திலும் பெண்கள் உரிமைகள் பற்றிய ஏனைய சர்வதேச சமவாயங்களிலும் பொருத்தணைகளிலும் உடன்படிக்கைகளிலும் உள்ளடங்கியுள்ள உரிமைகள் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது.
ஒத்திசையாமை ஏற்படுகையில் சிங்களப் பதிப்புருவே மேலோங்கிநிற்கும்	**37**. இச்சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் பதிப்புருக்களுக்கு இடையில் ஏதேனும் ஒத்திசையாமை காணப்படுகையில், சிங்கப் பதிப்புருவே மேலோங்கி நிற்கும்.